# தமிழீழ அரசியல்துறை
POLITICAL WING OF TAMILEELAM
https://thamileelaarasiyalthurai.info
tat.info.international@gmail.com
+(44) 0734 983 8393


**நிர்வாகம்**
**தமிழீழ அரசியல்துறை**
**அனைத்துநாடுகள்**
**12-09-2025**

TAT20250912-012T

## உன்னதமான மூத்த போராளி சின்னையா ஆனந்தம் (ஆனந்தன்) அவர்களுக்கான மதிப்பளிப்பு!

தமிழின விடுதலையை, தனது வாழ்வின் அதியுயர் இலட்சியமாக வரித்து, அந்த உயரிய இலட்சியத்திற்காக,எமது விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பகாலத்திலிருந்தே, எமது தமிழீழத் தேசியத்தலைவருக்கும்,இயக்கத்தின் ஆரம்பகாலப் போராளிகள் பலருக்கும் அடைக்கலம் கொடுத்து பாதுகாத்து, விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு உறுதுணையாக வாழ்ந்த உன்னதமான போராளி திரு.சின்னையா ஆனந்தம்(ஆனந்தன்) அவர்களை நாங்கள் கடந்த 07-09-2025 அன்று இழந்து விட்டோம்.தமிழ்த் தேசியத்தின் எழுச்சிக்கும், வளர்ச்சிக்கும் உந்துசக்தியாக நின்று, முனைப்புடன் செயற்பட்ட ஒரு மூத்த தமிழினப் போராளி, இயற்கையின் கோரப்பசிக்குப் பலியாகிவிட்டார். இந்த உன்னதமான போராளியை இழந்து, இன்று எமதுதேசம் மீளாத்துயரில் மூழ்கிக் கிடக்கின்றது.

அமரர் சின்னையா ஆனந்தம் அவர்கள் ஒரு அற்புதமான மனிதர் உயர்ந்த குண இயல்புகள் கொண்டவர் பொறுமையும், நேர்மையும் கண்ணியமும் மிக்கவர் அனைவரையும் கவர்ந்து கொள்ளும் பன்முக ஆளுமை படைத்தவர்.தமிழீழத்தேசியத்தலைவரின் மிக நம்பிக்கைக்குரிய மூத்த போராளிகளில் இவரும் ஒருவராவார்.இவரது இழப்பு தமிழர் தேசத்திற்கு என்றுமே ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

தமிழீழத்தனியரசே ஈழத்தமிழர்களின் தேசிய இனப் பிரச்சனைக்கு இறுதியான, உறுதியான தீர்வு என்பதில் இவர் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர். ஈழத்தமிழர்களின் உயிர்களையும் உடைமைகளையும் அழித்து, நிலத்தையும், வளத்தையும் சூறையாடி, ஒட்டு மொத்தமாக தமிழரின் தேசிய அடையாளத்தையே சிதைத்து விடும் நோக்குடன்,சிங்களஅரசு தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும், இன அழிப்புப்போரை இவர் முழுமையாக எதிர்த்து நின்றார். இந்த அழிவிலிருந்து தமிழின மக்கள் முழுமையாக விடுபட்டு, விடுதலை பெற்று, சுதந்திரமாக, கௌரவமாக, நிம்மதியாக வாழ்வதையே இவர் தனது குறிக்கோளாக வரித்துக் கொண்டார்.தான் வரித்துக் கொண்ட குறிக்கோளில் உறுதி தளராது, பாதை விலகாது இறுதி மூச்சு வரை பயணித்தார்.தமிழீழவிடுதலைப்புலிகள் இயக்கத்தையும் அதன் இலட்சியத்தையும் முழு மனதுடன் ஏற்று, தமிழீழவிடுதலைப் போராட்டத்திற்கு பல்வேறு வழிகளிலும், கடல் வழியாகக் கண்டங்கள் பல கடந்து, ஆபத்து நிறைந்த பல தளங்களிலும் அசாத்தியத் துணிவோடு ஆரவாரமின்றி, அமைதியாக இவர் ஆற்றிய விடுதலைப்பணிகள் அளப்பரியவை.

எமது விடுதலை இயக்கம் தோற்றம் பெற்ற ஆரம்ப காலம் முதல் யாழ்பல்கலைக்கழகத்தில் ஆரம்பித்து,2009 இல் ஆயுதப்போராட்டம் அமைதியடையும் வரை, தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களால் வழங்கப்பட்ட, சகல இடுபணிகளையும் செவ்வனே நிறைவேற்றி, எமது விடுதலை இயக்கத்தின் வளர்ச்சியில்,முக்கிய பங்கு வகித்த, அமரர்.சின்னையா ஆனந்தம் அவர்களுக்கு எமது விடுதலைப்போராட்டத்தில் ஒரு நிரந்தரமான இடம் பொறிக்கப்பட்டுள்ளது.

TAT20250912-012T

முள்ளிவாய்க்கால் யுத்தத்தில் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் ஆயுதப்போராட்டம் பாரிய பின்னடைவைச் சந்தித்த காரணத்தால், சில ஆண்டுகள் மிகுந்த மன உளைச்சலுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தார். அப்போது பிரித்தானியாவில் வாழ்ந்து வந்த இவர், மன உளைச்சலிருந்து மீண்டெழுந்து தமிழினவிடுதலைக்காக சிறந்த திட்டமிடலோடு, அரசியல் போராட்டத்தை ஆரோக்கியமாக முன்னெடுத்து வருகின்ற, அனைத்துத் தமிழ்க்கட்டமைப்புக் களின் செயற்திட்டங்களுக்கும் தனது தார்மீக ஆதரவை வழங்கிவந்தார். அத்தோடு பிரித்தானியாவில் கல்வி கற்கும் இளையோர்களுக்கு, தான் பெற்றிருந்த தமிழ்அறிவையும், பொருளியல் பாண்டித்தியத்தையும் புகட்டும், ஓர் சிறந்த ஆசிரியராகவும் பல தமிழ்ப் பாடசாலைகளில் பணியாற்றியுள்ளார் என்பதும் குறிப்பிட வேண்டிய அம்சமாகும்.

அமரர் சின்னையா ஆனந்தம்(ஆனந்தன்) அவர்களின் இழப்பால்,மீளாத்துயரில் ஆழ்ந்திருக்கும் உறவினர்கள், நண்பர்கள், ஊரவர்கள் அனைவரோடும் இணைந்து, தமிழீழ அரசியல்துறை யினராகிய நாமும், எமது ஆழ்ந்த இரங்கலைப் பகிர்ந்து கொள்கின்றோம். தமிழீழத்தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் வழிகாட்டலைப் பின்பற்றி, அவரது உறுதியான இனப்பற்றுக்கும், விடுதலை வேட்கைக்கும் மதிப்பளித்து, அவர் ஆற்றிய விடுதலைக்கான பெரும் பணிகளைக் கௌரவிக்கும் முகமாக, தமிழீழத்தின் மாபெரும் தேசிய விருதுகளில் ஒன்றான **“தேசக்காற்று”** என்ற கௌரவ விருதினை,அமரர் சின்னையா ஆனந்தம் (ஆனந்தன்) அவர்களுக்கு வழங்குவதில், தமிழீழ அரசியல்துறையினராகிய நாம் பெருமை அடைகின்றோம். சத்திய இலட்சியத்திற்காக இறுதிவரை உயிர் வாழ்ந்த, இவர் போன்ற அற்புதமான போராளிகள் உண்மையில் எம்மை விட்டுப் போகவில்லை. இவர்கள் எமது தேசத்தின் சுதந்திரமூச்சாக, எம்மையெல்லாம் உள்ளிருந்து இயக்குகின்ற இலட்சியநெருப்பாக என்றென்றும் எம்முள் எரிந்து கொண்டு, எமது இலட்சியப் பயணத்தை வழிநடத்துவார்கள்.

**“தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்”**

கி. நல்லையா
திரு. கி. நல்லையா
நிர்வாகப் பொறுப்பாளர்
தமிழீழ அரசியல்துறை
அனைத்து நாடுகள்

ச. அசோகா
திருமதி ச. அசோகா
பொறுப்பாளர்
தமிழீழ அரசியல்துறை
அனைத்து நாடுகள்